www.padippakam.com



# யானை வியாபாரமும் அடிமைச் சேவகமும்

43

அடிமை வியாபாரத்துக்கு அடுத்தபடியாக யானை வியாபாரம் ஒல்லாந்தர் காலத்தில் இலாபம் தரும் தொழிலாக இருந்தது. ஒல்லாந்தர் இரண்டு வகைகளில் தங்களது வியாபாரத்துக்கு வேண்டிய யானைகளை பெற்றுக் கொண்டார்கள்.

முதலாவதாக தாங்களே நேரடியாக வேட்டைக்காரர்களை வைத்து. யானைகளைப் பிடித்தார்கள். இரண்டாவதாக தங்களுக்குக் கீழிருந்த சிற்றரசர்கள், வன்னியர் பிரதானிகளிடமிருந்து திறையாக யானைகளைப் பெற்றுக் கொண்டார்கள்.

இவ்வாறு நேரடியாகவும், திறையாகவும் வன்னிக் காட்டிலும், தென்பகுதியிலுள்ள கதிர்காமம், அம்மபாந்தோட்டை, மாத்தறைக் காடுகளிலும் பிடிக்கப்பட்ட யானைகள் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்குள்ள காரைதீவுத் துறைமுகத்திலிருந்து இந்தியாவிற்கு அனுப்பிவைக்கப்பட்டன.

இந்தியாவின், வங்காளம், விஜயநகரம், கொல்கொண்டா, தஞ்சாவூர், முதலான பெருநகரங்களிலிருந்து யானை வர்த்தகர்கள் காரைதீவுக்கு வந்து யானைகளை ஏலத்தில் வாங்கிச் செல்வர்.

பூநகரியில் யானைகள் பிடிப்பதை மேற்பார்வை செய்வதற்கென்றே தனியான ஒரு அதிகாரி நியமிக்கப்பட்டான். கி.பி 1697ல் டொன் கஸ்பார் நிச்சய சேனாதிராயன் யானை வேட்டைத் தலைவனாக நியமிக்கப்பட்டிருந்தான்.

பூநகரி, பல்லவராயன் கட்டு இலுப்பைக் கடவை ஆகிய மூன்று இடங்களிலும் பாரிய யானைக் கொட்டில்கள் இருந்தன. இந்தக் கொட்டில்களில் 12 நாட்களுக்கு புதிதாகப் பிடித்து வரப்படும் யானைகள் கட்டி வைக்கப்படும். யானையின் ஆரோக்கியத்தைப் பரிசோதிப்பதற்கே இந்த ஏற்பாடாகும். இந்தப் பன்னிரண்டு நாட்களில் யானை நோய்வாய்ப்பட்டு விட்டால் அது கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது. அதற்குப் பதிலாக புதிய யானை ஒன்றை அதைப் பிடித்து வந்தவர் கொண்டுவரவேண்டும்.

அந்தப் 12 நாளும் யானை நல்ல ஆரோக்கியமானதாக இருந்தால், பின்பு அது யாழ்ப்பாணக் கோட்டைக்கு அனுப்பி வைக்கப்படும். அங்கு ஒல்லாந்துக் கம்பனிக் குறி சுட்டபின்பு அந்த யானை ஏல விற்பனைக்கு தயாராக்கப்படும்.

கி.பி 1695-ல் டொன் பிலிப்பு சங்கரப்பிள்ளையும், திம்மரச நாயக்கனும் பிரபல யானை ஏல விற்பனையாளர்களாக இருந்தார்கள்.

வருடந்தோறும் 30 ஆயிரம் தொடக்கம் 50 ஆயிரம் இறைசால் வரை வருமானம் தந்து வந்த யானை வியாபாரம் பிற்காலத்தில் இந்தியாவில் ஏற்பட்ட உள்நாட்டுக் குழப்பங்களாலும், இந்தியச் சிற்றரசர்களுக்கிடையில் ஏற்பட்ட யுத்தங்களாலும் யானையை வாங்குவதற்கான தேவை குறைந்ததால் யானை வியாபாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. கி.பி 1765-ம் ஆண்டில் 18 யானைகள் விற்கப்பட்டதாக ஒல்லாந்தரின் அறிக்கை கூறுகின்றது.

நெல் வேளாண்மை ஒல்லாந்தர் காலத்தில் ஒரு தொழிலாக இருந்தது. அதை ஊக்குவிப்பதற்காக ஒல்லாந்தர்கள் புதிய புதிய குளங்களை வெட்டுவித்ததோடு, ஏற்கனவே இருந்த பழைய குளங்களையும் தூர் எடுத்து அணைகளை உயர்த்திக் கட்டிப் புதுப்பித்தனர்.

யாழ்ப்பாணம், பூநகரி, மன்னார் ஆகிய மூன்று நிர்வாகப் பிரதேசங்களிலும் விழைந்த நெல் அந்தப் பிரதேசங்களிலிருந்த மக்களின் தேவைக்கு மித மிஞ்சியிருந்ததால் மிகுதியான நெல் மதுரை, நாகபட்டினம் பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. திருகோணமலையிலும், மட்டக்களப்பிலும் விழைந்த நெல் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு அனுப்பப்படக் கூடாது என்று உத்தரவு இருந்ததால், அங்கும் அங்கு வாழ்ந்த மக்களின் தேவைக்கு மித மிஞ்சியிருந்த நெல் கொழும்பு, காலிப் பகுதிகளுக்குப் ஏற்றுமதி செய்யப்பட்டது.

ஒல்லாந்தர்கள் தங்களது அரசாங்க நிலத்தில் விழைந்த நெல்லை ஒரு பறை 14 அல்லது 15 துட்டாகவும், சுதேசிகளின் நிலத்தில் விழைந்த நெல்லை 1 பறை 10 துட்டாகவும் வாங்கினர். அரசாங்க வயல்களில் தமிழ்நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட அடிமைகள் ஒல்லாந்த கம்பனிக் குறி சுடப்பட்டபின் வேலைக்கு அமர்த்தப்பட்டனர்.

நெடுந்தீவில் தங்களது தேவைகளுக்காக குதிரைகளை வளர்ப்பதற்கு பேர்த்துக் கேயர்கள் ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். ஆனால் ஒல்லாந்தர்களோ அதை தங்களது தேவைகளுக்கு மட்டுமல்லாமல் வியாபாரமாகவும் பயன்படுத்திக் கொண்டனர். அவர்கள் பாரசீயம் (ஈரான்) சாவகம் (ஜாவா) ஆகிய நாடுகளிலிருந்து நல்லினக் குதிரைகளை வரவழைத்து புதிய இனக் குதிரைகளை உருவாக்க முயற்சி செய்தனர். கி.பி 1697ம் ஆண்டில் நெடுந்தீவில் 2 1/2 வயதுடைய 500 குதிரைக் குட்டிகள் இருந்துள்ளன. இவை வளர்ந்து பயன்படுத்தத் தயாரான பின் கயிறு எறிந்த பிடிக்கப்பட்ட கட்டளைகளுக்கு கீழ் பணியுமாறு பயிற்சியளிக்கப்பட்டது. அதன் பின் அவை யானைகளைப் போல இந்தியத் த்ரகர்களுக்கு ஏலத்தில் விற்கப்பட்டன. அக்காலத்தில் நெடுந்தீவுக் குதிரையை ஒன்று 25 இறைசாவாகவும், இரணைதீவுக் குதிரை 35 இறைசாவாகவும் விற்கப்பட்டது.

இவற்றைவிட மர வியாபாரமும் ஒல்லாந்தர் காலத்தில் இலாபம் தரும் தொழிலாக இருந்தது. வன்னிக் காட்டிருந்த பெரிய மரங்களை தறித்து வீழ்த்திய ஒல்லாந்தர்கள் அவற்றை பலகைகளாகவும், சட்டங்களாகவும் அறுப்பித்து ஐரோப்பாவிற்கு ஏற்றுமதி செய்து வந்தனர். இந்த வியாபாரத்திற்கான மரம் வெட்டும் தொழில் அடிமைகளைக் கொண்டும். இராஜ காரியம் என்று சொல்லப்படுகின்ற சம்பளமில்லாத ஊழியர்களையும் கொண்டுசெய்யப்பட்டது.




கி.பி1679-ம் ஆண்டுக்குரிய ஒல்லாந்தரின் அறிக்கையிலிருந்த இந்த மர வியாபாரம் பற்றி விரிவாக அறியக் கூடியதாக இருந்தது.

மரம் தறிக்கும் வேலை திஸ்ஸாவை என்ற அதிகாரியின் கீழ் நடத்தப்பட்டது. இதற்கென ஒல்லாந்து கம்பனியின் அடிமைகளான 293 பேர் வேலைக்கு அமர்த்தப் பட்டனர். இதில் 145 பேர் 20 அல்லது 25 பேர் கூட்டமாகச் சேர்ந்து காட்டுக்குச் சென்று மரங்களைத் தறிப்பர். எஞ்சிய 148 அடிமைகள் தறித்த மரங்களை அருகிலுள்ள கடற்கரைப் பகுதிக்கு எடுத்துச் செல்வர். இவர்களுக்கு சம்பளம் எதுவும் கிடையாது. அதற்குப் பதிலாக மாதம் ஒன்றுக்கு ஒரு பறை அரிசியும், சில கருவாடுகளும், சிலவேளைகளில் புகையிலையும் கொடுக்கப்பட்டது.

இராஜ காரியம் என்ற சம்பளம் இல்லாத ஊழியத்தின் அடிப்படையில் மீனவர்கள் இவ்வாறு அடிமைகளால் தறித்து கடற்கரைகளுக்கு கொண்டு வந்து சேர்க்கும் மரங்களை துறைமுகங்களுக்கு கொண்டு சென்று சேர்க்க வேண்டும். ஒவ்வொரு வருடமும் நாகர் கோவிலில் இருந்து 173 மீனவர்களும், குடத்தனை கற்கோவளம் முதல் தொண்டமானாறு வரையுள்ள வடமராட்சிப் பகுதியிலிருந்து 349 மீனவர்களும், பச்சிலைப்பள்ளியிலிருந்து 276 மீனவர்களும் இத்தகைய இராஜ காரியத்தில் ஈடுபட்டனர். பொதுவாக கோடை காலத்தில் மரங்கள் தறிக்கப்பட்டடு மாரிகாலத்தில் ஏற்றிச் செல்லப்பட்டன.

காட்டுமரங்கள் மட்டுமல்லாமல் பனை மரங்களும் கூட தறித்து ஏற்றுமதி செய்யப்பட்டன. கி.பி· 1677ம் ஆண்டு மட்டும் இவ்வாறு 50, 687 கை மரங்களும், 26,050 சலாகைகளும் நாக பட்டினத்துக்கு அனுப்பி வைக்கப் பட்டன.

**பூநகரி, பல்லவராயன்கட்டு இலுப்பைக்கடவை ஆகிய மூன்று இடங்களிலும் பாரிய யானைக் கொட்டில்கள் இருந்தன. இந்தக் கொட்டில்களில் 12 நாட்களுக்கு புதிதாகப் பிடித்து வரப்படும் யானைகள் கட்டி வைக்கப்படும். யானையின் ஆரோக்கியத்தைப் பரிசோதிப்பதற்கே இந்த ஏற்பாடாகும். இந்தப் பன்னிரண்டு நாட்களில் யானை நோய்வாய்ப்பட்டு விட்டால் அது கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது. அதற்குப் பதிலாக புதிய யானை ஒன்றை அதைப் பிடித்து வந்தவர் கொண்டு வர வேண்டும்.**

- நக்கீரன்